# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

**SC.No. 111/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 1 | நாள் | : | 14.08.2025 |
| பெயர் | : | சாந்தி | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 14th day of August 2025.

எதிரி ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சிவகிரியில் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டிலிருந்து தையல் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். இன்னொரு ஆட்டோ ஓட்டுநராக இருந்தார். என் கணவர் ஆட்டோ ஓட்டுநராக இருந்தார். 14.08.2018 அன்று அவர் ஓட்டிவந்த ஆட்டோ சங்கத்தின் செயலாளராக இருந்து வந்த நிலையில் இரவு 11 மணிக்கு பின்னால் ஆட்டோ ஓட்ட வரக்கூடாது என்ற விதியை மீறியதன் தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டுள்ளது. பொன்மாரிக்கும் என் கணவருக்கும் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. விடிகாலையில் வீட்டிற்கு வந்த என் கணவர் சம்பவம் பற்றி என்னிடம் கூறினார். நான் பிரச்சனை ஏதும்

செய்ய வேண்டாமென்று கூறினேன். என் கணவர் தலைவரிடம் தகவல் தெரிவித்துவிட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்போவதாக சொன்னார். நான் அன்றைய தினம் நாகமாரியம்மன் கோவிலுக்கு செல்லப்போவதாக கூறினேன். கோவிலுக்கு சென்றுவிட்டு திரும்ப வா நான் ஸ்டாண்டில் இருப்பேன் என்று கூறினார். 15.08.2018 அன்று இரவு 8 முதல் 8.30 மணிக்குள்ளாக என் கணவர் இருந்த ஆட்டோ ஸ்டாண்டிற்கு சென்றேன். சிவகிரி பேருந்து நிலையத்தில் உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் என் கணவர் ஆட்டோ ஓட்டி வந்தார். நான் சென்று பார்த்தபோது என் கணவரை அங்கு காணவில்லை. அந்த ஆட்டோ ஸ்டாண்டிற்கு அருகில் ஆட்டோ ஓட்டுநர்கள் ஓய்வு எடுப்பதற்காக ஒரு செட் உள்ளது. நான் என் கணவரை தேடி அந்த செட்டிற்குள் போனேன். எதிரிக்கும் என் கணவருக்கும் அங்கே வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது. தேவிடியா கூதிமகனே என்று என் கணவரைப் பார்த்து அசிங்கமாக பேசினார். இரவு 11 மணிக்கு மேல்தான் வருவேன் என் பிழைப்பை கெடுக்கிறியா தேவிடியா மகனே என்று கூறி இடது கண்ணம், இடது கழுத்து வலது கை ஆகிய இடங்களில் கத்தியால் குத்தினார். நான் ஓடிப்போய் தடுத்தேன். ஆட்டோ ஸ்டாண்டில் இருந்தவர்களும், பேருந்து நிறுத்தத்தில் இருந்தவர்களும் ஓடி வந்து தடுத்தார்கள். யாரும் பக்கத்தில் வராதீர்கள் இவனை குத்தியதுபோல் உங்களையும் குத்திவிடுவேன் என்று எதிரி சொன்னார். என் கணவருக்கு கை, கழுத்தில் இரத்தம் வெளியேறிக் கொண்டே இருந்தது. பாலசுப்பிரமணியன் என்பவரது

ஆட்டோவில் நானும், செந்தில், ரமேஷ், கருப்பசாமி ஆகியோர் சிவகிரி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். பொன்மாரி அங்கிருந்து ஓடிவிட்டார். அங்கு என் கணவருக்கு முதல் உதவி சிகிச்சையளிக்கப்பட்டது. தகவல் தெரிந்து காவல் நிலையத்திலிருந்து மருத்துவமனைக்கு வந்தார்கள். அங்கு என் கணவர் பேச முடியாத நிலையில் இருந்ததால் என்னிடம் விசாரித்தார்கள் நான் சொன்னேன். நான் சொல்ல சொல்ல அவர்கள் எழுதிக் கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம்தான் நான் கொடுத்த வாக்குமூலம் ஆகும். நான் கொடுத்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். ரமேஷ் என்பவரும் அதில் கையெழுத்துப் போட்டார். அங்கிருந்து 108 ஆம்புலன்ஸ் தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். தென்காசி அரசு மருத்துவமனையிலிருந்து திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார். 18.08.2018 அன்று இரவு சுமார் 10 மணியளவில் என் கணவர் இ றந்துபோனார். சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட கத்தியை என்னால் அடையாளம் காட்ட முடியும் சம்பவ இடத்தில் உடைந்திருந்தது. அந்த கத்தி சா.பொ.1 ஆகும். என் கணவர் காக்கிச் சட்டையும், காக்கி நிற பேண்டும் வெள்ளை நிற பணியனும் அணிந்திருந்தார். என் கணவர் அணிந்திருந்த அரைக்கை சட்டை சா.பொ.2 ஆகும். வெள்ளை நிற பணியன் சா.பொ.3 ஆகும். என்னை 16.08.2018 அன்று திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் விசாரித்தபோது என் கணவரின் சட்டையையும்,

பணியனையும் போலீசாரிடம் ஒப்படைத்தேன். என் கணவரை அடக்கம் செய்த அன்று இரவு நான் வீட்டிலிருந்தபோது காவல் நிலையத்திலிருந்து காவல் ஆய்வாளர் இரத்தக்கறை படிந்த என் சேலையை வாங்கிச் சென்றார். அந்த சேலை சா.பொ.4 ஆகும். நான் சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்தேன். அன்று நான் கொடுத்த வாக்குமூலம் இதுதான் அது அ.சா.ஆ.2 ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

நான் ஓடிப்போய் தடுத்தேன் என்ற விவரத்தை ஆய்வாளரின் விசாரணையின்போது கூறினேன். நான் பேருந்து நிலையத்திற்கு சென்று அங்கே இருந்த ஆட்டோ ஸ்டாண்டில் காணவில்லை என்ற விவரத்தை ஆய்வாளரின் விசாரணையில் கூறியுள்ளேன். 16.08.2018 மதியம் 3 அல்லது 4 மணிக்கு என்னிடம் போலீசார் என் கணவரின் சட்டை மற்றும் பணியனை வாங்கிக் கொண்டார்கள். நான் 16.08.2018 அன்று மருத்துவமனையிலிருந்த போது என்னுடன் என் மாமியாரும் என் உறவினர்களும் இருந்தார்கள். உடைகளை கொடுக்கும்போது அவர்கள் அனைவரும் இருந்தார்கள். அழகுமயில், அழகு ஜோதி இருவரும் அவர்களது கணவர்களுடன் அங்கே இருந்தார்கள். என் கணவரை அடக்கம் செய்து திரும்பும்போது மாலை 6 மணிக்கு மேல் ஆகிவிட்டது. என்னிடம் மாலை 6 மணியிலிருந்து 7 மணிக்குள்ளாக வாங்கினார்கள். நான் நீதிமன்றத்திற்கு சாட்சியமளிக்க வரும்முன்பாக என்னை ஒரு முறை காவல் நிலையத்திற்கு வரச்

சொன்னார்கள். என்னிடம் காவல் நிலையத்தில் வைத்து தேதி மாதம் ஞாபகப்படுத்திக் கொள்ளும்படி படித்துக் காட்டினார்கள் என்றால் சரிதான். என் கணவருக்கு என்னுடன் திருமணம் ஆகும் முன்பே சூர்யா என்ற பெண்ணுடன் திருமணமாகியிருந்தது. அந்த பெண்ணுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக அவரை விலக்கிவிட்டு வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான். நானும், திருமணமாகி கணவரைப் பிரிந்து வீட்டில் வாழ்ந்து வந்தேன் என்றால் சரிதான். நான் பட்டியலினத்தைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். இராமசுப்பு மறவர் சமூகத்தைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். என்னை இராமசுப்பு திருமணம் செய்து கொண்டதால் முதலில் என் கணவர் குடும்பத்தார் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். ஆனால் பின்னர் ஏற்றுக் கொண்டார்கள் என்று சாட்சி கூறுகிறார். எங்கள் குடும்பத்தாரும் என் முதல் கணவரும் இராமசுப்பு மீது விரோதம் கொண்டிருந்தார்கள் என்றால் சரியல்ல. என் உடன் பிறந்த சகோதரர் பெயர் முருகேசன். நான் எங்கள் வீட்டு குடும்ப விஷேசங்களில் கலந்து கொள்வதில்லை என்றால் சரியல்ல. இராமசுப்பு குடும்ப நிகழ்ச்சிகளில் என்னையும் அழைத்துச் செல்லமாட்டார் என்றால் சரியல்ல. நான் இராமசுப்பு என்னுடன் வாழ்ந்த காலத்தில் எங்கள் இரு குடும்பத்தினரும், குடும்ப சமூகத்தினரும் எங்களை ஏற்றுக்கொள்ளாமல் இருந்தனர் என்றும் அதனால் என் கணவர் மீது அவர்கள் உறவினர் மற்றும் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் விரோதத்தில் இருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. பேருந்து

நிலையத்திற்குள்ளாக ஒரு ஆட்டோ ஸ்டாண்டும், பேருந்து நிறுத்தத்திற்கு வெளியே ஒரு ஆட்டோ ஸ்டாண்டும் உள்ளது. பேருந்து நிலையத்திற்குள்ளாக இருக்கும் ஆட்டோ ஸ்டாண்டில் தேவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான் ஆட்டோ ஓட்டுகிறார்கள் என்றால் சரிதான். பேருந்து நிறுத்தத்திற்கு வெளியே ஆட்டோ ஸ்டாண்டில் அனைத்து சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும் சங்க உறுப்பினர்களாக இருந்து ஆட்டோ ஓட்டுகிறார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. தட்டாங்குளம் காளியம்மன் கோவிலுக்கு வாராந்திர வெள்ளிக்கிழமைகளில் கோவிலுக்குச் செல்ல ஆட்டோவில் பயணிகளை அழைத்துச் செல்வார்கள் என்றால் சரிதான். என் கணவர் வெளி ஸ்டாண்டில் இருக்கும் ஆட்டோ ஓட்டுநர்கள் பேருந்து நிலையத்திற்குள் வந்து ஆட்களை ஏற்றக் கூடாது என கூறியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவ்வாறு என் கணவர் சொல்லவில்லை. என் கணவர் அவ்வாறு வெளியில் உள்ள ஆட்டோ ஓட்டுநர்களை சத்தம்போடும் வழக்கம் உள்ளது என்றால் சரியல்ல. அதனால் வெளியில் இருக்கும் ஆட்டோ ஓட்டுநர்கள் என் கணவர் மீது விரோதம் கொண்டிருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. தேவிபட்டினம், விஸ்வநாதப்பேரி, இராயகிரி, வடக்குச் சத்திரம், தெற்கு சத்திரம் போன்ற ஊர்களில் இருக்கும் ஆட்டோ ஓட்டுநர்கள் பயணிகளை ஏற்றி வந்து சிவகிரி பேருந்து நிலையத்தில் வந்து பயணிகளை இறக்கிவிடுவார்கள் என்றால் சரிதான். அவ்வாறு ஆட்களை ஏற்றி வரும் வெளியூர் ஆட்டோகாரர்களை என் கணவர் பேருந்து

நிலையத்திற்குள் ஆட்டோ ஓட்டி வரக்கூடாது என்றும் பேருந்து நிலையத்திலிருந்து ஆட்களை ஏற்றிச் செல்லக்கூடாது என்றும் அடிக்கடி கண்டித்து வந்தார் என்றால் சரியல்ல. 15.08.2018 க்கு ஒரு வாரத்திற்கு முன்பு என் கணவர் தேவிபட்டினத்தைச் சேர்ந்த கருப்பையா என்ற ஆட்டோ ஓட்டுநரை பேருந்து நிலையத்திற்குள் எப்படி ஆட்டோ ஓட்டிவரலாம் என்று கூறி தகராறு செய்து அடித்தார் என்றால் சரியல்ல. அதன் காரணமாக தேவிபட்டினத்தைச் சேர்ந்த கருப்பையாவும், அவரைச் சார்ந்தவர்களும் என் கணவர் மீது கடும் விரோதம் கொண்டிருந்தார்கள் என்றால் சரியல்ல. 15.08.2018 க்கு முன்பு நடந்த தேவர் ஜெயந்தி விழாவிற்கு பிளக்ஸ் போர்டு அமைப்பது சம்பந்தமாக என் கணவருக்கு சிவகிரி பசும்பொன் நகரைச் சேர்ந்த புல்லட் ராஜா என்பவருக்குமிடையே தகராறு ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் கணவருக்கும் புல்லட் ராஜாவிற்கும் தகராறு ஏற்பட்டது என்றும் நான் அதை வேண்டுமென்றே மறைக்கிறேன் என்றால் சரியல்ல. இரட்டணையைச் சேர்ந்த போத்திராஜா என்பவரது மனைவி கனகம் என்பவர் வீட்டிற்கு சென்று மானபங்கபடுத்தியதாக அந்த தெருக்காரர்கள் பிடித்து அடித்து கண்டித்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அதன் காரணமாக காவல் நிலையத்தில் விசாரணை நடந்தது என்றால் சரிதான். காவல் நிலைய விசாரணையில் என் கணவருக்கு எதிராகவும், போத்திராஜாவுக்கு ஆதரவாகவும் பேசினார் என்றால் சரியல்ல. அது நடந்து 10 வருடம் ஆகிறது. என் கணவருக்கு பெண்கள் தொடர்பு அதிகம் உண்டு

என்றால் சரியல்ல. சிவகிரி பட்டியலினத்தைச் சேர்ந்த இராணுவ வீரர் பூமாரி மனைவி மாரியம்மாள் இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.மாரியம்மாள் என்பவருடன் என் கணவருக்கு பழக்கம் ஏற்பட்டு அதன் காரணமாக அவர்கள் இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பூமாரியின் மனைவி அவரை விட்டு பிரிந்ததற்கு என் கணவர்தான் காரணம் என்று பூமாரியும் அவரைச் சார்ந்தவர்களும் என் கணவர் மீது விரோதம் கொண்டிருந்தார்கள் என்றால் சரியல்ல. எதிரியின் சகோதரர் காளிமுத்து என்பவர் கொலை செய்யப்பட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. அது சம்பவத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பு நடந்தது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த காளிமுத்து என்பவரை கொலை செய்தவர் எனது கணவருக்கு உறவினர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு அதுபற்றி நன்கு தெரியும் என்றும் வேண்டுமென்றே அதை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் தெருவில் என் வீட்டின் அருகில் முத்துக்குமார் என்ற காவலர் உள்ளார். அவர் காவல் துணை கண்காணிப்பாளரின் ஓட்டுநர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவருக்கு உயர் அதிகாரிகளின் பழக்க வழக்கம் உண்டு என்றால் அது எனக்கு தெரியாது. அவர் என் கணவர் குடும்பத்தின் உறவினர் என்றால் சரிதான். நல்ல முறையில் பழக்க வழக்கம் உள்ளவர் என்றால் சரிதான். 15.08.2018 தேதிக்கு முன்பு என் கணவரின் ஆட்டோ ஸ்டாண்டின் விதிமுறைகள் எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான் என்

கணவர் கூறியதுதான். சம்பவத்திற்கு முன்பு சங்கத்தில் யார் யார் உறுப்பினர்கள் எத்தனை பேர் உறுப்பினர்கள் என்று எனக்கு தெரியாது. ரமேஷ், செந்தில், கருப்பசாமி, பாலசுப்பிரமணியன் ஆகியோர்களை சம்பவத்திற்கு முன்பு பழக்கம் இல்லை என்றால் சரிதான். அவர்களிடம் பேசியதில்லை என்றால் சரிதான். என் மகன் பிறந்த நாள் விழாவிற்கு வந்திருந்தார்கள். அவர்களின் தந்தை பெயரோ, முகவரியோ தெரியாது என்றால் சரிதான். பேருந்து நிலையத்திற்குள்ளும் அதைச் சுற்றியும் மாலை 7 மணிமுதல் இரவு 10 மணிவரை போலீசார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருப்பார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதுபற்றி எனக்கு தெரியும் என்றும் வேண்டுமென்றே தெரியாது என்று பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாகமாரியம்மன் கோவில் தேவிபட்டினம் செல்லும் வழியில் உள்ளது அது தேவிபட்டினம் அருகில் உள்ளது என்றால் இரண்டு ஊர்களுக்கும் நடுவில் உள்ளது. சிவகிரியில் இருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. அங்கு செல்ல பேருந்து வசதி இல்லை. நடந்து செல்வார்கள் இருசக்கர வாகனத்தில் செல்வார்கள். தேவிபட்டினம் சிவகிரி சாலைக்கு இருபுறமும் கரும்பு தோட்டங்கள் உள்ளது என்றால் சரிதான். நான் அன்றைய தினம் நாகமாரியம்மன் கோவிலுக்கு எவ்வாறு சென்று மீண்டும் அங்கிருந்து எவ்வாறு வந்தேன் என்று புகார் வாக்குமூலத்திலும், விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரிதான். நாகமாரியம்மன் கோவிலில் இரவு 8 மணிமுதல் 9 மணி வரை இருக்கும் பகலில் ஒரு நேர பூஜை மட்டும் என்றால் சரியல்ல. கோவிலுக்கு பால், பழம், தேங்காய், பூ, பால்

பாத்திரம் முட்டையுடன் போவார்கள் என்றால் சரிதான். நான் பத்தி, சூடன் , மாலை மட்டும்தான் வாங்கிச் சென்றேன். நான் திரும்ப வரும்போது பிரசாதம் ஏதும் வாங்கி வரவில்லை. காவல் நிலையத்தின் அருகிலும் ஒரு பேருந்து நிலையமும், ஊருக்குள் ஒரு பேருந்து நிலையமும் உள்ளது இரண்டு பேருந்து நிலையங்கள் உள்ளது என்றால் சரிதான். புதிய பேருந்து நிலையத்திற்குள், பழக்கடைகள், டீக்கடைகள், எலக்ட்ரிக் கடைகள் உள்ளது. அந்த கடைகள் எத்தனை மணி வரை இருக்கும் என்று தெரியாது. இரவு 10.00 மணி வரை கிராம புற பேருந்துகள் வந்து செல்லும் என்றால் அதுவும் தெரியாது. பேருந்துகள் தெற்குபுற வழியாக வந்து வடக்குபுறமாக செல்லும். தெற்கு நுழைவு வாயிலுக்கு மேற்காக நகராட்சி அலுவலகம் உள்ளது. அதனருகில் காந்தி கலையரங்கம் உள்ளது. அங்கு அரசியல் கட்சி கூட்டம் நடக்கும் என்றால் சரிதான். தெற்கு நுழைவு வாயிலுக்கு 10 அடிக்கு கீழ்புறம் ஆட்டோ செட் உள்ளது. அந்த செட்டிற்குள் மின் இணைப்பு இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த செட் அமைந்துள்ள இடத்திற்கு கிழக்கே ஒரு தேர் உள்ளது. அதற்கு 10 அடி வடக்கே இருசக்கர வாகன நிறுத்தம் உள்ளது. அங்கு வசூலிக்கும் நபர் இரவு 11 மணிவரை இருப்பார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆனால் கட்டணம் வசூலிப்பவர் இருப்பார் ஆனால் அவர் பெயர் தெரியாது. அவர் பெயர் கருத்தப்பாண்டி என்றால் அதுவும் எனக்கு தெரியாது. அதற்கு வடக்கே இருபாலருக்கான கட்டண கழிப்பறை உள்ளது என்றால் சரிதான். கட்டணம் வசூலிப்பவர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான்.

அதற்கு நேர் எதிர்புறம் வேன் ஸ்டாண்ட் உள்ளது என்றால் சரிதான். இரவு 10 மணி வரை வேன் ஓட்டுநர்களும், கிளினர்களும் இருப்பார்கள் என்றால் சரிதான். பேருந்து நிலையத்திற்குள் சி.சி.டிவி கேமிரா உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இரவு 10 மணி வரை பேருந்து நிலையத்திற்குள் பயணிகளும் இருப்பார்கள் என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் நான் அங்கு சென்றேனா இல்லையா என்ற விவரம் வேன் ஸ்டாண்டில் இருந்தவர்களையும், பயணிகளையும், கடையில் இருப்பவர்களையும், கழிப்பிட பொறுப்பாளர்களையும் விசாரித்தால் தெரியும் என்றால் சரிதான். நான் கூறும் செட் என்பது ஓலை கூறையால் ஆனாது. அது வடக்கு பார்த்து திறந்தவெளி என்றால் சரிதான். கிழக்கிலும், மேற்கிலும் இருந்து பார்த்தால் உள்ளே என்ன நடக்கும் என்பது பற்றி தெரியாது. வடக்கிலிருந்து பார்த்தால் மட்டும்தான் தெரியும். அந்த செட்டிற்குள் சிமெண்ட் பிளாக் போட்ட தரையாகும் அது உடைந்த நிலையில் பராமரிப்பின்றி இருக்கும். 14.08.2018 ம் தேதி ஏற்பட்டதாக கூறப்படும் வாய்த்தகராறு சம்பந்தமாக என் கணவர் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. தலைவரும் புகார் கொடுக்கவில்லை. 14.08.2018 ம் தேதி என் கணவருக்கும் எதிரிக்கும் வாக்குவாதம் நடந்ததாக கூறப்படும் சங்கதி வழக்கிற்காக கூறப்படும் பொய் என்றால் சரியல்ல. சம்பவ நாள் சுதந்திர தினம் என்பதால் மறைந்த தேச தலைவர்களுக்கு அஞ்சலி செலுத்த இரவு 7 மணிமுதல் 8.30 மணி வரை அரசியல் கட்சியினர் சிவகிரி பேருந்து நிலையம் அருகில் உள்ள காந்தி கலையரங்கம்

நோக்கி ஊர்வலமாக நடந்து சென்றனர் என்றால் எனக்கு தெரியாது. ஊர்வலம் நடந்தது என்றும் நான் அந்த நேரம் சம்பவ இடத்திற்கே செல்லவில்லை என்பதால்தான் அந்த விவரம் பற்றி எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. சிவகிரி பேருந்து நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த என் கணவரின் ஆட்டோவை போலீசார் சிவகிரி காவல் நிலையத்திற்கு எடுத்துச் சென்றார்கள். என் கணவரை அடக்கம் செய்யப்பட்ட பின்னர் எடுத்துச் சென்றார்கள். நான் சிவகிரி அரசு மருத்துவமனைக்கு செல்லும் முன்பாகவே போலீசார் அங்கு வந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் சென்ற பின்புதான் அங்கு வந்தார்கள். பாலசுப்பிரமணியன் ஆட்டோவில் மூன்று நபர்களுக்கும் கூடுதலாக பயணம் செய்ய முடியாது என்றால் சரிதான். எனக்கு எந்த காயமும் இல்லை என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்கத் தெரியும். என் கணவர் மருத்துவரிடம் எதுவும் பேசவில்லை. பேச முடியாத நிலையில் இருந்தார். நான் அவ்வாறு கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. நான் மருத்துவரிடம் தனியாக ஏதும் கூறவில்லை. போலீசார் மருத்துவரிடம் பேசினார்கள் என்றால் சரிதான். போலீசார்தான் மருத்துவரிடம் சொன்னார்கள் என்றால் சரியல்ல. நான் அங்கிருந்து 8.45 மணிக்குள் அங்கிருந்து தென்காசிக்கு அனுப்பி வைத்தார்கள் சுமார் 10 நிமிடம் சிகிச்சையளித்தார்கள். 108 ஆம்புலன்சிற்கு யார் தகவல் தெரிவித்தார்கள் என்று எனக்கு தெரியாது. என் மாமியார் அப்போதே எங்களுடன் மருத்துவமனைக்கு வரவில்லை தகவல் தெரிந்துதான் வந்தார். தென்காசிக்கு நானும், என் மாமியாரும்

இராமசுப்புரமணி என்பவரும் சென்றோம். போலீசார் எங்களுடன் வரவில்லை. தென்காசி போலீசார் வந்து விசாரிக்கவில்லை. தென்காசி மருத்துவரிடம் நான் கூறினேன். திருநெல்வேலி மருத்துவமனையில் மறுநாள் என் கணவருக்கு அறுவை சிகிச்சை நடந்தது அன்றைய தினம் போலீசார் விசாரித்தார்கள். எழுதிக் கொண்டார்களா என்று எனக்கு தெரியாது. நான் கூறுவது தவறு என்றும் என்னை போலீசார் விசாரிக்கவேயில்லை என்று சொன்னால் சரியல்ல. புகாரிலும், இன்று சார்வு செய்யப்பட்ட அழைப்பாணையிலும் என்னுடைய கையொப்பம் வெவ்வேறானதாக உள்ளது என்றால் சரிதான் இரண்டும் என்னுடையதுதான். அ.சா.ஆ.1 ல் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல என்றால் சரியல்ல. எதிரி எந்த திசையை நோக்கி அங்கிருந்து சென்றார் என்று நான் புகாரில் கூறவில்லை என்றால் சரிதான். செந்திலும், பாலசுப்பிரமணியும் அரசு மருத்துவமனைக்கு வந்திருந்தார்கள் என்று நான் புகாரில் கூறவில்லை என்றால் சரிதான். 2018 ம் ஆண்டு நடைபெற்ற பஞ்சாயத்து தேர்தலில் ரணதேவ் என்ற பாபு வெற்றி பெற்றார் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த தேர்தலில் அவரை எதிர்த்து சேதுராஜா என்ற எதிரியின் மாமனார் போட்டியிட்டு தோல்வியடைந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் கணவர் ரணதேவ் என்ற பாபுவுக்கு வேலை பார்த்தார் என்றும் எதிரி சேதுராஜா என்பவருக்கு வேலை பார்த்தார் என்றும் ரணதேவ் என்ற பாபுவிற்கு எதிரிராக எதிரி தீவிரமாக வேலை பார்த்ததால் மேற்படி ரணதேவ் என்ற பாபு எதிரி மீது விரோதம் கொண்டிருந்தார் என்றால் அதுபற்றி

எனக்கு தெரியாது. எனக்கு அனைத்து விவரங்களும் தெரியும் என்றும் வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளிக்கும் முன்பாக போலீசார் எவ்வாறு வாக்குமூலம் அளிக்க வேண்டுமென்று எனக்கு சொன்னார்கள் என்றால் சரியல்ல. நடந்ததை கூறும்படி சொன்னார்கள். நான் சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் முன்பு அளித்த வாக்குமூலம் அனைத்தும் காவல் துறையினர் சொல்லிக்கொடுத்ததுபோல் சொன்னேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை நடத்துவதற்கு அரசு தரப்பு வழக்கறிஞருக்கு உதவியாக எங்களுக்கென தனியே ஒரு வழக்கறிஞர் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கூறுவது தவறு என்றும் இந்த வழக்கை நடத்த நான் தனியே வழக்கறிஞரை நியமித்து அவர்மூலம் எங்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது என்றால் சரியல்ல. 15.08.2018 தேதி இரவு 7 முதல் 8.30 மணி வரை சிவகிரி பேருந்து நிலையத்திற்கு வெளியே அரசியல் கட்சியினர் மறைந்த தலைவர்களுக்கு அஞ்சலி செலுத்த ஊர்வலமாக வரும்வழியில் எனது கணவர் இராமசுப்பு தகராறு செய்து அந்த தகராறில் அந்த ஊர்வலத்தில் கலந்து கொள்ள என் கணவருக்கு தெரிந்த விரோதிகள் தாக்கியதால் காயம் ஏற்பட்டு பின்னர் தப்பிக்கவேண்டி சிவகிரி பேருந்து நிலையத்திற்குள் உள்ள ஆட்டோ ஸ்டாண்ட் செட்டிற்குள் வந்து இருந்துள்ளார் என்றும் என் கணவர் காயப்பட்ட விவரம் தகவல் கேள்விப்பட்டு என் கணவரை சிவகிரி பேருந்து நிலையம் சென்று பார்த்தபோது பேருந்து நிலையத்தில்

இருந்தவர்களும் சம்பவ கேள்விப்பட்டு வந்த ஆட்டோ ஓட்டுநர்களும் சிவகிரி அரசு மருத்துவமனைக்கு சென்றதாக கேள்விப்பட்டு நான் சிவகிரி அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் சிவகிரி பேருந்து நிலையத்திற்குள் நான் இல்லவே இல்லை என்றும் சம்பவத்தை நான் நேரில் பார்க்கவேயில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் எதிரி என் கணவரை அவதூறாக பேசியும், கத்தியால் தாக்கியதாக சொல்வதும், பின்னர் எங்களை கொலை மிரட்டல் விடுத்ததாக கூறுவதும் அதன்பின்னர் சிவகிரி அரசு மருத்துவமனைக்கு ஆட்டோவில் சாட்சிகள் ரமேஷ், செந்தில், கருப்பசாமி ஆகியோர்களுடன் உதவியுடன் மருத்துவமனைக்கு சென்றதாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. என் கணவரை தாக்கிய உண்மையான எதிரி யார் என்று தெரியாததால் யாரோ செய்த கொலைக்கு நான் பொன்மாரியைத்தான் எதிரியை சேர்க்க வேண்டுமென்று வற்புறுத்தியதால் எங்கள் குடும்பத்தினருக்கு தெரிந்த போலீசார் மற்றும் பாபு அவர்களின் தூண்டுதலின்பேரில் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தயாரிக்கப்பட்ட புகார் வாக்குமூலத்திற்கு அனுசரனையாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியால் என் கணவருக்கு எந்த காயமும் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலத்தில் எதிரி ஊரிலேயே இல்லை என்றும் அவர் ஆட்டோ

ஓட்டவேயில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலத்தில் புகார் எழுதிக் கொடுத்தேன் என்று கூறவில்லை. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 ஆவணத்தில் பொன்மாரி மீது புகார் எழுதிக் கொடுத்தேன் என்று காணப்படுகிறது என்றால் சரிதான். நான் எழுதிக் கொடுத்த புகாரிலும் என் கணவருக்கு யாரோ இனம் தெரியாத நபரால் ஏற்பட்ட காயம் என்று குறிப்பிட்டு புகார் கொடுத்திருந்தேன் என்றும் அந்த புகார் வழக்கிற்கு விரோதமாக அமையும் என்பதால் அதை மறைக்கப்பட்டு அ.சா.ஆ.1 புகார் பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. முதல் விசாரணையில் நான் கூறியுள்ள சங்கதிகளுக்கும் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்பதும் போலீசார் சொல்லிக்கொடுத்ததுபோல் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.08.14 18:06:51 +0530